சுருக்கம்

நினைவகம்–சென்னையில் அமரர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு 8 அடி உயரமுள்ள முழு உருவ வெண்கலச் சிலை அமைத்தல்–நிதி ஒப்பளிப்பு.ஆணை வெளியிடப்படுகிறது.

---

செய்தி மற்றும் சுற்றுலா (நினைவகம்)த் துறை

அரசாணை (நிலை) எண். 95 நாள்: 26.05.2006

ஆணை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு, அமரர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 8 அடி உயரமுள்ள முழு உருவ வெண்கலச் சிலை, பாண்டிச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள அவரது சிலையின் மாதிரி வடிவம் போன்று, சென்னையில், காமராசர் சாலை, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை சந்திப்பில் மணிக்கூண்டிற்கு அருகில் அமைக்க அரசால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

2) சிலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டன. அவற்றில், சிற்பி டாக்டர் எம். மணி நாகப்பா அவர்கள் ரூ.4.95 இலட்சத்திற்கான குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார்.

3) அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், சென்னை, காமராசர் சாலை, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை சந்திப்பில் மணிக்கூண்டிற்கு அருகில் அமரர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 8 அடி உயரமுள்ள முழுஉருவ வெண்கலச் சிலை நிறுவும் வகையில், சிற்பி டாக்டர் எம். மணி நாகப்பா அவர்கள் கோரியுள்ள ரூ.4.95 இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) குறைந்த அளவு திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

4) மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2220 செய்தி மற்றும் விளம்பரம் -60 ஏனையவை-800. ஏனைய செலவு-I திட்டத்தில் சேராதது –AX நினைவகங்கள்–17 சிறுபணிகள்". (து.தொ.கு 2220 60 800 AX 1701).

5) மேற்கண்ட செலவினத்திற்கான நிதியொதுக்கம் 2006-07 ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் சேர்க்கப்படும். 2006-07 ஆம் ஆண்டு திருத்திய/ இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதியொதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி, மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6) 2006-07 ஆம் ஆண்டிற்கான திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டிற்கான கருத்துருவில் இச்செலவினத்தையும் சேர்த்திடுமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7) மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9 அவர்கள் சார்பில், கணக்கு அலுவலர் (செய்தி) செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை அவர்கள் பெற்று முதல் தவணையாக 30 சதவீதத் தொகையும், சிலையின் மாதிரி வடிவத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் இரண்டாவது தவணைத் தொகையினை 50 சதவீதமும், சிலை முடிவுற்று நல்ல முறையில் ஒப்படைக்கப்பட்டது என்று சான்று பெற்ற பின்னர் இறுதி தவணைத் தொகை 20 சதவீதமும், திருவாளர் சிற்பி. டாக்டர் எம். மணி நாகப்பா, பழைய எண்.326, புதிய எண்.483, மவுண்ட்ரோடு, சென்னை 35 என்பவருக்கு பட்டியலை நேர் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8) இவ்வாணை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 104/JS(TK)/2006 நாள் 26.5.2006 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.113 –ன் மூலம் இசைவளித்துள்ளது.

/ஆளுநரின் ஆணைப்படி/

வெ. இறையன்பு
அரசு செயலாளர்

பெறுநர்
திருவாளர் சிற்பி டாக்டர் எம். மணி நாகப்பா,
பழைய எண்.326, புதிய எண்.483, மவுண்ட்ரோடு, சென்னை 35
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), பொதுப்பணித்துறை, சென்னை 600 005.
கண்காணிப்புப் பொறியாளர்,
கட்டிட கட்டுமானக் கோட்டம், பொதுப்பணித்துறை, சென்னை–5
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9
சம்பள கணக்கு அலுவலர், சென்னை 5
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 18/35
கணக்கு அலுவலர், செய்தி மற்றும் சுற்றுலா (வ.செ.பிரிவு) சென்னை–9
நகல்:
நிதி (பிஜி.1)(வ.செ.பொ.II/செ(ம)சு)த்துறை,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை–9
இருப்புக் கோப்பு/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்